# தாட்கோ– கடன் / நிதி உதவி கண்காணிப்பு முறைமை

(தாட்கோ லாட்ஸ் – TAHDCO LATS)

## முன்னுரை

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அரசின் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் பொதுத் துறை நிறுவனமாகும். கட்டுமான நிறுவனமாக 1974–ல் நிறுவப்பட்ட இன்னிறுவனம் பின்னர் 1981 லிருந்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள ஏதுவாக விரிவாக்கம் செய்யப்பட்டது. இக்கழகம், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டு உயர்வுக்கான நடவடிக்கைகளை முதன்மையாகக் கொண்டு செயல்படுவதால், திட்ட செயலாக்கத்தில் மின் ஆளுமையினை புகுத்த விரும்பியது. மின்–ஆளுமையினை தகுந்த நுட்பங்களோடும், உரிய வழிகாட்டுதல்களோடும் மற்றும் மின் கட்டளைகள் கொண்ட வெளிப்படையான, அதிகபட்ச பரவலாக்கலுடன் செயல்திறன் மிக்கதாக நடைமுறைபடுத்தவும் திட்டமிடப்பட்டது.

**வலை சார்ந்த மென்பொருள் முறைமை உருவாக்க முக்கிய நோக்கங்கள் :**

**தாட்கோ இணைய அடிப்படையிலான திட்ட மென்பொருள் முறைமை (Application software system) உருவாக்க முக்கிய நோக்கங்கள் :**

- மறைப்பின்மை (வெளிப்படையான)
- அனைத்து நிதி உதவிகளையும் உள்ளடக்கிய மேலாண்மைத் தகவல் முறைமை உருவாக்கம்.
- பற்றாக்குறை / குறைவுகளை ஆராய்ந்து அறிதல்
- நிதி உதவிகள் விரிவாக்கத்திற்கான கணிப்பாய்வு
- நிதி உதவிகளின் பயன் விளைவு மற்றும் புதிய திட்ட சிந்தனை
- தரவுத் தளம் உருவாக்கல்

## நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

சிறப்பு மைய நிதியிலிருந்து பட்டியல் இனத்தவர்களுக்காக தாட்கோ பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. நிலம் வாங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்
2. தொழில் முனைவோர் திட்டம்
3. தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் பெட்ரோல் / டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம் அமைப்பதற்கு மற்றும் அதற்கான நிலம் வாங்குதல்
4. இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்
5. மருத்துவமனை அமைத்தல்
6. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான சுழல் நிதி
7. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம்
8. விருப்புரிமை நிதித் திட்டம்
9. துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்
10. இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி
11. இளம் சட்டப்பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி

### தனி நபர் திட்டங்கள்:

### 1. நிலம் வாங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்



**நோக்கம்**

- குத்தகைதாரர் என்ற நிலையிலிருந்து உடைமையாளர் நிலைக்கு உயர்த்துதல்
- தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்களின் நில உடைமையினை அதிகரித்தல்

**திட்ட உதவி**

- அதிக பட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலமும் அல்லது புஞ்சை நிலமும் வைத்துக் கொள்ளலாம்

- அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்

**சிறப்பு அம்சங்கள்**

- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் – ஆதிதிராவிட மகளிர் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்படும்
- முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 100ரூ விலக்கு அளிக்கப்பட்டுள்ளது
- மின் இணைப்பு பெற முன்னுரிமை
- இணைத் திட்ட வசதி – கிணறு தோண்டுதல், ஆழ் துளைக் கிணறு தோண்டுதல் மற்றும் மின் இணைப்பு பெறுதல்

**தகுதி**

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த மகளிராக இருக்க வேண்டும்
- வயது 18–க்கு மேலும் 55 வயதிற்குள்ளாகவும் இருக்க வேண்டும்
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் நிலமற்றவராக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது

## 2. தொழில் முனைவோர் திட்டம்



**நோக்கம்**

- வருவாய் உருவாக்கத்திற்கான நிதி உதவி
- வயது வரம்பு 18 லிருந்து 55 வரை

**திட்ட உதவி**

- அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்
- மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்

**தகுதி**

- கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக, தொழிலில் விருப்பம் உள்ளவராக, தொழில் பற்றி அறிந்தவராக இருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது

- அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களின் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

## 2. பெட்ரோல் / டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல்

### நோக்கம்:




- சமூகத்தில் தொழில் முனைவோர் எண்ணிக்கையை அதிகரித்தல்
- தொழில் மயமாக்கலில் ஆதி திராவிடர்களின் இணையான பங்களிப்பினை உறுதி செய்யும் பொருட்டு, இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது.

### தகுதி

- விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் குறைந்த பட்ச கல்வித் தகுதியாக 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவர்களின் நியமனத்திற்கு எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயிக்கும் தகுதியை பெற்றிருக்க வேண்டும்

## 4. இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டம்

### நோக்கம் :



- வருவாய் உருவாக்கத்திற்க்கான நிதி உதவி
- வயது வரம்பு 18லிருந்து 35 வரை. தொழில் பயிற்சி பெற்றவராகவும் தொழில் / காப்பாளராகவும் இருக்க வேண்டும்

**திட்ட உதவி**

- அதிகபட்சமாக 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும்
- மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்

**தகுதி**

- கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக, தொழிலில் விருப்பம் உள்ளவராக, தொழில் பற்றி அறிந்தவராக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களின் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்

5. மருத்துவமனை அமைத்தல்

**நோக்கம்:**

- இளம் மருத்துவர்களுக்கு சொந்தமாக மருத்துவமனை அமைத்திட நிதி உதவி
- கிராம / வளர்ந்து வரும் பகுதி நகர் புறங்களிலும் மருத்துவ வசதியினை அதிகரித்தல்



**தகுதி**

- விண்ணப்பதாரர் மருத்துவமனை அமைப்பதற்கு எம்.பி.பி.எஸ், பி.எஸ்., எம்.எஸ் மற்றும் பி.டி.எஸ். ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது
- இந்தியன் மெடிக்கல் கவுன்சிலிங்கில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## 6. துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்

### நோக்கம் :



- முன்னுரிமை அடிப்படையின்படி மின் இணைப்பினை ஆதிதிராவிட விவசாயிகளுக்கு பெற்றுத் தருவதால், அவர்கள் நிலங்களை வளமுடையதாக ஆக்க ஊக்கமூட்டப்படுகிறது
- இத் திட்டத்தின் கீழ், முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பினை பெற ரூ.10,000/– மின் வாரியத்திற்குச் செலுத்தப்படுகிறது.

### தகுதி

- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்

### நிபந்தனை

- நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும்
- மேற்கண்ட நலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்

## 7. □ரு□□□மை □□□ □ட்ட□

### மேலாண்மை □ய□குந□/ மாவட்ட ஆட்ரிய□□ ரு□□□மை □□ □ட்ட□



சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தாட்கோ மற்றும் இதர திட்டங்களில் நிதியுதவி பெறாத ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றோர், 40 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், அரவாணிகள் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர்

இல்லாத குழந்தைகளுக்கு இத்திட்டத்தல் முன்னுரிமை வழங்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக ரூ.20,000/— உதவித் தொகையாக வழங்கப்படும்.

### மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை பயிற்சி திட்டம்

ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த தொழில் முனைவோராக விரும்புபவர்களுக்கும் ICWA/CA போன்ற பயிற்சிகளை தேவையின் அடிப்படையில் பெயர் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் மேலாண்மை இயக்குநரால் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படும். இதற்கான பயிற்சி கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை மேலாண்மை இயக்குநர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.



### குழு□களு□கான உத□ □ட்ட□

### 8. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான சுழல் நிதி / பொருளாதார கடனுதவி திட்டம்

**நோக்கம்:**



- சுய உதவிக் குழுவுக்குள், உள்கடன் கொடுத்தலுக்காக சுழல் நிதி கொடுக்கப்படுகிறது.
- நிலைத்த வருவாய் தரத்தக்க தொழில் துவங்க சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி

**திட்ட உதவி**

- திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்

- மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்
- சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவியினை ஒரு முறை மட்டுமே பெற முடியும்

## 9. இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி



இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வுகளை எழுத விரும்பும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதனிலை. (Preliminary Exam) தேர்வில் தேர்ச்சி பெற்று, முதன்மை தேர்வு (Main Exam) எழுதுபவர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி அளிக்கப் படுகிறது இத்தொகையினை புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

### தகுதி

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்

### நிபந்தனை

- இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்
- இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் மாநில, மத்திய அரசு, பொது துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் இத்திட்டத்தின் கீழ் மூன்று முறை பயன் பெறாதவராக இருக்க வேண்டும்

## 10. இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி

இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் துவ.ங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்களான மேசை, நாற்காலி, அலமாரி மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.50,000/– நிதியாக வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர்க்கு ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் தொகை விடுவிக்கப்படும்.

### தகுதி

- ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்
- சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
- தமிழ்நாடு பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும்
- வயது வரம்பு 25–லிருந்து 45–க்கு மிகாமல் இருக்க வேண்டும்
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–ற்கு மிகாமல் இருக்க வேண்டும்.





## மென்பொருள் முறைமை சிறப்பியல்புகள்

பயனா□ களு□கு......

- விண்ணப்பிக்க எளிதானது. பயனர் தோழமையானது
- மாவட்ட தலைமையகம் செல்ல வேண்டாம் அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே இருந்து விண்ணப்பிக்கலாம்
- விண்ணப்ப விவரங்கள் ஆன்லைனில் இடப்பட்டு உள்ளதால், பொது மக்கள் முன்னோக்கிய அனுப்பீடு மற்றும் எதிர் கால தகவல் தேட்ட வசதிக்காக விவரங்களை கோப்பாக சேமிக்கவும், அச்சிட்டுக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.
- விண்ணப்ப குறியீட்டு எண்ணைப் பயன்படுத்தி (AIN) விண்ணப்பதாரர் எந்த நேரத்திலும் தங்கள் விண்ணப்ப நிலையை கண்காணிக்க முடியும்
- செயல்முறை கால அளவை குறைக்க உதவுகிறது விண்ணப்பதாரர் குறுகிய காலத்தில் நிதிப் பயன் பெறவும் உதவுகிறது.


மாவட்ட மேலாள□களு□கு......


- திட்ட செயலாக்கத்தை மிக எளிதாக்கி கால வவரயறைக்குள் முடிக்க உதவுகிறது
- நேரத்தை சேமிக்கிறது
- மானிய விடுவிப்பிலும் கடன் தொகை விடுவிப்பிலும் ஒருவரே மீண்டும் பெற இயலாத வகை உள்ளது
- ஒவ்வொரு விண்ணப்பத்தின் அடுத்தடுத்த செயல்முறைகளை கண்காணிக்க முடியும்
- பல்வேறு பரிமான அளவுகளில் வலுவான தரவு தளத்தை உருவாக்க முடியும்
- விண்ணப்பதாரர்களுக்கு, உரிய விதிகளின்படி கடன் ஒப்புறுதி வழங்கவும், கடன் ஒப்புறுதி கடன் நிராகரிப்பு கடிதங்களை கணினி மூலம் தயாரித்துக் கொள்ளவும் முடியும்
- உரிய வங்கிகளின் கடன் வழங்கும் செயல்முறைக் கடிதங்களையும் வங்கியின் ஒப்புகை ஆணையினையும் தயாரிக்க முடியும்
- கடன் கொடுத்தலில் உள்ள அனைத்தையும் பதிவு செய்ய முடியும்
- இரவல் பெயரிலான கடன் நடவடிக்கைகளை தடுக்க முடியும்.

**தலைமை அலுவலகத்திற்கு ..**


- அன்றாட கண்காணிப்பும் அதன்படியான சரியான தகவல்களையும் தர முடியும்
- அனைத்து மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை, பயனரின் தேவைக்கேற்ப வடிவமைத்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்களுக்கான பயன் உரிய காலத்தில் சென்றடைகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள இயலும்.
- தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ள இயலும்
- பல்வேறு பரிமான அளவுகளில் வலுவான தரவு தளத்தை உருவாக்க முடியும்
- பொது மக்கள் இணைம் மூலம் அணுக பல வசதிகள், பயனர் பதிவு, பயனர் அங்கீகார செயல்முறை மற்றும் துறை பயனர்கள் அணுகவும் நிர்வகிக்கவும் பயனர் அணுகல் உரிமைகள் படி ஆளுமை வசதி முறைப்படுத்தப்பட்டுள்ளது
- செலவிடப்படாத நிதி ஏதும் இருப்பின் அதனைப் பயன்படுத்த, புதிய செயல் முறைகளை திட்டமிட முடியும்

## திட்ட செயல் முறை விளக்கப் படம்





ADMIN LOGIN
Display over all Information
DB Storage
Manage Roles
DB Storage
Manage Users
DB Storage
Manage Districts
DB Storage
Manage Schemes
Apply Scheme
Form Approval Process
Bank Management
DB Storage
Scheme Configuration
DB Storage
Circular Management
DB Storage
Template Management
DB Storage
NGO Management
DB Storage
Reports
DB Storage
Verification
Yes
Request to Bank (Manual)
Rejected
Response to Applicant
Verification
Yes
DB Storage
Response to Applicant
Response to Applicant


DM/ADM Login
Centralized Storage
Display over all Information
Centralized Storage
Apply Scheme
District Reports
Approval Process
Centralized Storage
Verification
Yes
Request to Bank (Manual)
Rejected
Verification
Yes
DB Storage
Response to Applicant
Response to Applicant
Response to Applicant

கடன் விண்ணப்பம் கண்காணிப்பு அமைப்பு செயல்பாடுகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது

| செயல்பாடு | விளக்கம் |
|---|---|
| தகவல் வழங்குதல் | தாட்கோவால் உருவாக்கப்பட்டுள்ள தகவல் ஒதுக்கீடு செயல்பாடு அனைத்து அடிப்படை தகவல் பெற குடிமக்களுக்கு உதவும் (எ.கா) நடைமுறை வழிகாட்டல்கள், வடிவங்கள், சேவை வழங்கும் முறை, ஆவண தேவைகள், முதலியன |
| விண்ணப்பம் கிடைக்கும் தன்மை | எல்லா இடங்களிலும் விண்ணப்பங்கள் கிடைக்கும் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது |
| பெற்றதற்கான சான்று | இந்த செயல்பாடு விண்ணப்பம், உடன் இணைக்கும் ஆவணங்ங்ள் சமர்ப்பிப்பதை கையாளுகிறது. முழுமையான தவகல்களுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது விண்ணப்ப அடையாள எண்ணுடன் ஒப்புகை சீட்டினை உருவாக்கித் தருகிறது. |
| விண்ணப்ப நிலையினை கண்டறிதல் | விண்ணப்பதாரர் தன் விண்ணப்ப அடையாள எண்ணை (AIN) உட்புகுத்தும்போது இந்த சிறப்பியல்பினைக் கொண்டு விண்ணப்பத்தின் தற்போதைய நிலையினை காணலாம் . இந்த செயல்பாட்டினைக் கொண்டு விண்ணப்ப தகவல்களை மீட்டெடுக்கலாம். |
| விண்ணப்ப சரிபார்ப்பு | இந்த செயல்பாடு சமர்ப்பித்த ஆவணங்கள் அடிப்படையில் விண்ணப்பதாரின் கோரிக்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்க அனுமதிக்கும் |

## 2.4 விண்ணப்ப படிவங்கள்

பல்வேறு திட்டங்கள் தொடர்புடைய தகவல்களை கைப்பற்றுவதில், வெவ்வேறு விண்ணப்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை எளிதாக்க ஒரு தகவல் திரையில் அனைத்து திட்டங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. மேற்சொன்ன தகவல் திரையில் உரிய திட்டத்தை தேர்வு செய்தாலே, விண்ணப்பதாரர் நேரடியாக தனது விருப்ப திட்ட விண்ணப்பத்தினை சென்றடையலாம். பின்னர் இணைய வழியாகவே (ஆன்லைன்) விண்ணப்பத்தை நிறைவு செய்து உரிய ஆவணங்களுடன் தாட்கோவுக்கு சமர்ப்பிக்கலாம். கீழ்காணும் திட்டங்களுக்கு இவ்வாறு விண்ணப்பங்களை உபயோகிக்கலாம்.

1. நிலம் வாங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்
2. தொழில் முனைவோர் திட்டம்
3. தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் பெட்ரோல் / டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம் அமைப்பதற்கு மற்றும் அதற்கான நிலம் வாங்குதல்
4. இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்
5. மருத்துவமனை அமைத்தல்
6. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான சுழல் நிதி
7. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம்
8. விருப்புரிமை நிதித் திட்டம்
9. துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம்
10. இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

முழுத் தகவல்களுடன் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, ஏற்கக்கூடிய விண்ணப்பங்களுக்கான ஒப்புதல் வழங்கப்படும்.

### 3. நிர்வாக தொகுதி

லாட்ஸ் மென்பொருள் பயன்பாட்டு முறை ஒரு இணக்கமுள்ள இயக்கம் கொண்டுள்ளதால் நம் தேவைப்படி முதன்மைத் தரவுகளை நிர்வகிக்க இயலும். எனவே நிர்வாக தொகுதி அமைக்கப்பட்டு, அதன் மூலம் முதன்மைத் தரவுகள் நிர்வகிக்கவும், பயணர் உருவாக்கவும் ஏதுவாகிறது. தாட்கோ தலைமையகம் நிர்வாக செயல் ஆட்சியராக செயல்படும்.

### 3.1 பயணர் மேலாண்மை

இந்த கட்டகம் (Module) புதிய பயனர்கள் உருவாக்க அமைக்கப்பட்டுள்ளது.

லாட்சின் பயனர்கள் விவரம் :

- மேலாண்மை இயக்குனர் / பொது மேலாளர் (திட்டம்) / பிரிவு அலுவலர்கள் (சார்புடைய) – தலைமையகம்
- மாவட்ட மேலாளர்கள் / உதவி மாவட்ட மேலாளர்கள்

- உதவியாளர் / இளநிலை உதவியாளர்
- செயல் ஆட்சியர் (Administrator) – தலைமையகம்

தாட்கோ தலைமையகம் நிர்வாக செயல் ஆட்சியராக செயல்படும். மாவட்டங்களுக்குக்கான பயனர்கள் செயல் ஆட்சியர் மூலம் உருவாக்கப்படுவார். இந்த கட்டகம் புதிய பயனர் கணக்கினை துவக்குகிறது / நிர்வகிக்கிறது.

### 3.2 பங்கு மேலாண்மை

இந்த கட்டகம் பயனர்களின் பங்கு (Role) குறித்து தீர்மானிக்கவும் அதற்கான அனுமதியினை வழங்கவும் உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்டம், பயனர் பெயர், பயனரின் கடவு சொல் (Password) மற்றும் அவரது பங்கு (Role) பற்றிய தகவல்கள் இதன் மூலம் திரட்டப்படுகின்றன. அதன் விவரங்கள் மற்றும் திருத்தி அமைத்தல் / வரிசை படுத்துதல் / நீக்குதல் / இயங்குவது / இயங்காமல் செய்வது போன்றவற்றை கையாள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### 3.3. மாவட்டங்கள் மீதான மேலாண்மை

தாட்கோ முதன்மைச் செயலகமாயிருந்தாலும், அடிப்படை செயல் அலுவலங்கள் மாவட்ட அலுவலகங்களே ஆகும். தாட்கோ மாவட்ட அலுவலக விவரத்தை உருவாக்கவும் மாவட்டங்கள் பற்றிய தகவல்களை திரட்டவும் இக்கட்டகம் வசதி பெற்றுள்ளது. இதன் மூலம் மாவட்டத்தின் பெயர், முகவரி, மாவட்டத்தில் உள்ள பட்டியலினத்தோர் எண்ணிக்கை போன்றவற்றை திரட்ட இயலும். அதன் விவரங்கள் மற்றும் திருத்தி அமைத்தல் / வரிசை படுத்துதல் / நீக்குதல் / இயங்குவது / இயங்காமல் செய்வது போன்றவற்றை கையாள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### 3.4 வங்கி மற்றும் கிளை மேலாண்மை

வங்கிகள் கடன் வழங்கலில் பங்குதாரர்களாகவும் முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடியவர்களாகவும் உள்ளதால் வங்கி மற்றும் வங்கி கிளை குறித்த விவரங்கள் கையாளப்படவேண்டும். இதனை கையாளும் விதமாகவும் வங்கிகள் குறித்த தகவல்கள் திரட்டும் விதாமாகவும் இக்கட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் மற்றும் திருத்தி அமைத்தல் இயங்காமல் செய்வது / இயங்குவது / நீக்குதல் / வரிசை படுத்துதல் போன்றவற்றை கையாள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### 3.5 திட்ட உருவமைப்பு

பத்து வகையான திட்டங்களை தாட்கோ நடைமுறைப்படுத்துவதால், திட்ட வாரியான தகவல்களை சேகரிக்கவும், புதிய வெவ்வேறான திட்டங்களை சேர்க்கவும், இக்கட்டகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மான்யத் தொகை கடன் தாமதமாக செலுத்துதல், அதிகபட்ச கடன் தொகை, பயனாளியின் பங்குத் தொகை, விண்ணப்பப்படிவங்களை மேலேற்றுதல் (uploading) செயல் இலக்கு தீர்மானித்தல், திட்ட நிறைவேற்றுத்துக்கான கால அளவு நிர்ணயித்தல், மாவட்ட மேலாளர்களுக்கான மின் அஞ்சல் அனுப்புகை போன்றவற்றை ஒவ்வொரு திட்டத்திற்கும் வகை செய்ய முடியும்.

### 3.6 சுற்றறிக்கை மேலாண்மை

தாட்கோ தலைமையகத்திலிருந்து மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் அறிவிக்கை / சுற்றறிக்கை போன்றவற்றை வகைப்படுத்த இந்த கட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.7 அதிகாரப் பூர்வ அலுவலகக் கடித முன் வடிவு மேலாண்மை

பல்வேறு வகையான கடிதங்களை, தரப்படும் உள்ளீடுகள் கொண்டு உருவாக்கும் விதமாக இம்மென்பொருள் முறைமை அமைக்கப்பட்டுள்ளது அச்சிடத் அவ்வாறு தேவைப்படும் கடிதங்களின் முன்வடிவினை தயாரிக்கும் விதமாக, இந்த கட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.8 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மேலாண்மை

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்களின் விண்ணப்பம் மற்றும் செயல்பாட்டில் தொடர்புடையவர்களாக உள்ளத்தால், மாவட்ட வாரியான தொண்டு நிறுவனங்களின் விவரம் பேணப்படவேண்டி உள்ளது. அவ்வாறு வகைப்படுத்த இக் கட்டகம் பயன்படுகிறது.

## 4. மாவட்ட அலுவலக அட்டவணை

மாவட்ட அலுவலகங்கள், விண்ணப்பங்களை தேர்வு செய்வதில் முன்னிலை வகிக்கின்றன தேர்வு செய்ய ஏதுவாக, மாவட்ட அளவில், பயனர் நுழைவுரிமை வழங்கும் நிலை வரும் போது, தலைமையக அனுமதியுடன் அதனை மேற்கொள்ள இக்கட்டகம் துணை செய்கிறது.

## 4.1 திட்டங்களின் தொகுப்பு

பொதுமக்கள் நிதி உதவி பெற ஆன்லைன் மூலம் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது அவைகள் தரும் விவரங்களை கொண்டு தனித் தனியான அடையாள எண் உண்டாக்கப்படும் அவ்வாறு அடையாள எண் உண்டாக்கவும், விண்ணப்பங்களை பரிசீலிக்கவும் நபர் சார்ந்த நிதி உதவி பெற விரும்பும் தொழில் சார்ந்த தகவல்கள் தேவைப்படுகின்றன அந்த விவரங்ளை பெறும்விதமாக அனைத்து திட்டங்களுக்கும் விண்ணப்பத்தில் தகவல் தளம் அமைக்கப்பட்டுள்ளன.

## 4.2 பணி வழிமுறை

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன், ஒப்புதல் / கடன் வழங்கல் / நிராகரித்தல் என பல நிலைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. ஒப்புதல் பெற அனுப்பிட ஏதுவாக திட்ட வாரியான நிலுவை விண்ணப்பங்களை ஆய்வு செய்தல் தேர்வு பொறுப்பு குழு ஆய்வுக்கு உட்படுத்துதல், மானியம் மற்றும் கடன் விடுவிப்பு போன்றவற்றிற்கான வகை அனைத்தும் இம் மென் பொருள் முறைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே NSFDC கடன் வழங்கலிலும், பணி வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## 5. அறிக்கை

தலைமையகத்திலும், மாவட்ட அலுவலகங்களிலும் தேவைப்படும் அனைத்து வகையான அறிக்கைகளை சுட்டளவுப்படி உருவாக்கும் விதத்தில் லாட்ஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது. திட்ட வாரியாக, வங்கி வாரியாக, மாவட்ட வாரியாக மாநில மொத்த வாரியாக முன்னேற்ற அறிக்கையாக எந்த வடிவத்திலும் தயாரித்துக் கொள்ளலாம்.

## 6. முக்கிய சிறப்புகள் / கருத்துக்கள் / அடிப்படைகள்

- இம்மென்பொருள் மூலம், தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளில் விண்ணப்பிக்க முடியும்
- ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கு தனிப்பட்ட அடையாள முகவரி
- ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனிப்பட்ட அடையாள எண்.
- ஒவ்வொரு நிலைக்கும் உரியவர்களுக்கு மின் அஞ்சல் செய்தி
- அனைத்து அறிக்கைகளையும் அச்சிட்டுக் கொள்ள வசதி

## 7. மென்பொருள் சூழல்

1. Operating System – RHEL Ver- 5. x and above

2. RDBMS – Postgresql Ver 8.3 and above

3. Scripting Language – PHP 5.3 with JQuery and Postgresql support

4. Web server – Apache – 2.x

## SYSTEM ARCHITECTURE

